# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1890/35 - 2014 නොවැම්බර් මස 28 වැනි සිකුරාදා - 2014.11.28

*1890/35 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சபரகமுவ மாகாண மாகாண சபை**

சபரகமுவ மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச்சட்டம்

சபரகமுவ மாகாண மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் மேற்கூறிய மாகாண சபையின் முதலமைச்சரும், நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சருமான என்னால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹீபால ஹேரத்,<br>
முதலமைச்சர் மற்றும் நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும்<br>
திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய,<br>
மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, பயணிகள்<br>
போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு<br>
மற்றும் நிர்மாணத்துறை தொடர்பான அமைச்சர்,<br>
சபரகமுவ மாகாண மாகாண சபை.

சபரகமுவ மாகாண மாகாண சபை,<br>
2014, நவெம்பர் 11.

**கட்டளைகள்**

1. இக்கட்டளைகள் சபரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத்திட்ட ஒழுங்குவிதிகள் என அறிமுகப்படுத்தப்படும். *(சுருக்கப் பெயர்.)*

2. I. *1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழ் அத்துடன் திருத்தங்களுடன் வாசிக்க வேண்டிய 1994 ஆம் ஆண்டின் 03 ஆம்* இலக்க சபரகமுவ மாகாண கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழும் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் கீழும் சபரகமுவ மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது கூட்டுச் சங்கமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள இதனகத்து இதன்பின் ஊழியர் என அறிமுகப்படுத்தப்படுகின்ற 1992 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துடன் வாசிக்க வேண்டிய 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் வரைவிலக்கணத்தின்படி நிரந்தர நியமனமொன்றைப் பெற்ற ஊழியர் ஒருவர், கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர் ஒருவராகச் சேர்வதற்கு உரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும் ; *(சந்தாக்காரர் ஒரு வராவதற்கான தகைமைகள்.)*

II. மேலே 2. I ஆம் பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் சபரகமுவ மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஓய்வூதிய நியதிச் சட்டம் செயற்படும் தினத்தில் அந்த மாகாணத்தின் கூட்டுறவுச் சங்கமொன்றில் அல்லது கூட்டுறவுச் சங்கமொன்றில் சேவையில் ஈடுபட்டிருந்த மேலே 2. I ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி நிரந்தர நியமனம் ஒன்றைப் பெறாத ஊழியர்கள் அவர்கள் தனிப்பட்டதான வகையில் நிரந்தரப்படுத்துவதற்காக சபரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றிருப்பார்களாயின் அவர்களுக்குத் தனிப்பட்டதாகும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மதிப்பீட்டை மீறி ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் கூடிய ஊழியர்கள் அடிப்படையின் கீழ் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உரிமைகளைப் பெறுவதற்கு தகைமையுள்ளவர்கள் ஆவார்கள் ;

III. இந்த ஓய்வூதியத் திட்டம் செயற்படத் தொடங்கிய திகதிக்குப் பின் சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள், அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மதிப்பீட்டிற்குள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மாத்திரமாக இருத்தல் வேண்டும்.

*விருப்பத்தைத் தெரிவித்தலும் அங்கீகரிக்கப்படுதலும்.*

3. I. (அ) இந்த ஓய்வூதியத் திட்டம் செயற்படும் திகதியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு உரிமைபெற்ற நபரொருவர் தாம் ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர் ஒருவராக சேர்வதற்கு விருப்பம் தெரிவித்தல் வேண்டும் ;

(ஆ) இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு எதிர்பார்க்கும் ஊழியர், ஒருவரால், இதனகத்து இதன்பின் பணிப்பாளர் என அறிமுகப்படுத்தப்படுகின்ற ஓய்வூதியத் திட்டத்தின் பணிப்பாளரால், உபயோகிக்கப்பட வேண்டுமென பணிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு நிமித்த காலத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம், பணிப்பாளரால் விதிக்கப்பட்ட கால எல்லை ஒன்றிற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) மேலே 3.I (ஆ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லை இக்கட்டளை செயற்படும் திகதி தொடக்கம் 06 மாத காலத்துக்கு மேற்படாத காலகட்டம் ஒன்றாக இருத்தல் வேண்டும் ;

II. இந்த ஓய்வூதியத் திட்டம் செயற்படத் தொடங்கிய திகதிக்குப் பின்னரும் இக்கட்டளைகள் செயற்படுத்துவதற்கு முன்னரும் நிரந்தரச் சேவையில் சேரும் அத்துடன் சேர்ந்திருக்கும் ஊழியர்கள், பணிப்பாளரால் உபயோகிக்க வேண்டுமென பணிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்து அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம், இக்கட்டளைகள் செயற்படும் திகதி தொடக்கம் 90 நாட்கள் அல்லது தாம் சேவையில் சேர்ந்து 90 நாட்களுக்குள் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களுள் முன்னர் வரும் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் ;

*சந்தாக்காரர் ஒருவராகக் கருதப்படுதல்.*

III. இக்கட்டளைகள் செயற்படத் தொடங்கிய திகதியிலிருந்து நிரந்தரச் சேவையில் சேர்ந்த ஊழியர் ஒருவர் தாம் சேவையில் சேர்ந்த திகதி தொடக்கம் 90 நாட்களுக்குள் பணிப்பாளரால், உபயோகிக்க வேண்டுமெனப் பணிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரம் பூர்த்தி செய்து நிமித்த கருமத்துக்காக பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. I. ஓய்வூதியத் திட்டத்ததில் சேர்வதற்கான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பம் ஒன்றில் விண்ணப்பதாரியின் தகைமைகள் தொடர்பில் வழங்கப்பட்ட தகவல்களின் உண்மை நிலை மற்றும் திருத்த நிலைகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்குள் தமது சிபார்சுகளுடன் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் ;

II. பணிப்பாளரால் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட பின்பு அந்த விண்ணப்பதாரி ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர் ஒருவராக கருதப்படும் ;

*விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல்.*

III. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காரணத்தின்படி அல்லது சில காரணங்களின்படி விண்ணப்பதாரி ஒருவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(அ) இக்கட்டளைகளின் 2. I மற்றும் 2. II ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஊழியர் ஒருவராக இல்லாதிருக்கும் போது ;

(ஆ) 18 வயதுக்குக் குறைந்த அல்லது 60 வயதுக்கு மேற்பட்ட ஊழியர் ஒருவராகும் போது ;

(இ) விண்ணப்பத்தில் குறைபாடுகள் இருக்கும் போது ;

(ஈ) பொய்யான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போது ;

(உ) விண்ணப்பம் இக்கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது ;

IV. ஏதாவது விண்ணப்பம் பணிப்பாளரால் நிராகரிக்கப்படும் போது, ஓய்வூதியத் திட்டத்தின் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் அதைச் செயற்படுத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பமொன்றை நிராகரிப்பதற்குத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமொன்றில் ஆலோசனைக் குழுவின் இணக்கத்தைப்பெற்ற தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பணிப்பாளரால் விண்ணப்பதாரியிடம் அறிவிக்கப்படல் வேண்டும்.

5. I. ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தாக்காரர் ஒருவர் ஆரம்பக் கட்டணமாக 5,000 ரூபா பணத்தொகையும், தமது மாதாந்த திரட்டிய சம்பளத்திலிருந்து 5% வீதம் மாதாந்தச் சந்தாப் பணமாக பணிப்பாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் . அத்துடன் அந்த சந்தாப் பணத்தொகையை தமது மாதாந்தச் சம்பளத்திலிருந்து அறவிட்டு பணிப்பாளரிடம் அனுப்புவதற்காக தொழில் வழங்கிய சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு எழுத்துமூலமாக அதிகாரம் அளித்தல் வேண்டும் ; சந்தாப்பணம்.

II. தொழில் வழங்கும் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் தொழில் பெறுநரால் ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் ஓர் ஊழியர் தொடர்பில் ஐயாயிரம் ரூபா (5,000 ரூபா) வும் ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த திகதி தொடக்கம் பணிப்பாளரால் விதிக்கப்படும் கால எல்லை ஒன்றிற்குள் ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பணிப்பாளரால் விதிக்கப்படும் வகையில் 06 மாத கால எல்லைக்குள் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் தொழில் வழங்கும் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் ஒவ்வொரு ஊழியர் தொடர்பிலும் அவரது / அவளது மாதாந்தச் சம்பளத்தில் 2.5% இற்குச் சமமான பணத்தொகையொன்று மாதாந்தம் ஓய்வூதியத் திட்டத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும் ; சங்கத்தின் சந்தாப்பணம்.

III. தொழில் வழங்கும் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் ஒவ்வொரு ஊழியரினதும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட்ட மாதாந்தச் சந்தாப் பணத்தொகையும் சங்கத்தின்/கூட்டுச் சங்கத்தின் சந்தாப் பணத்தொகையும் அடுத்துவரும் மாதத்தின் கடைசித் தினத்தில் அல்லது அதற்கு முன் பணிப்பாளரிடம் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படுதல் வேண்டும். சந்தாப்பணத் தொகைகளை அனுப்பி வைத்தல்.

IV. மேலே 5. III ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் சந்தாப் பணத்தொகையை பணிப்பாளரிடம் அனுப்புதலைப் புறக்கணித்துள்ள சந்தர்ப்பம் ஒன்றில் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் தண்டப்பணத் தொகையொன்று செலுத்தல் வேண்டும். அத்தகைய தண்டப் பணத்தொகை பணிப்பாளரால் குறிப்பிடப்படும் திகதியில் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| * | தாமதம் 10 நாட்களுக்கு மேற்படாதிருந்தால் | 05% |
| * | 11 நாட்களுக்கும் 01 மாதத்திற்கும் இடைப்பட்ட காலம் தாமதித்தால் | 10% |
| * | 01 மாதத்திற்கும் 03 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதித்தால் | 15% |
| * | 03 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதித்தால் | 20% |
| * | 06 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் தாமதித்தால் | 30% |
| * | 12 மாதங்கள் தாமதித்தால் | 50% |

6. இந்த ஓய்வூதியத் திட்டத்தின் சந்தாக்காரர் ஒருவர் இந்த ஓய்வூதியத்திற்கான உரிமைபெறுவதற்காக ஆகக் குறைந்தது 60 மாதங்கள் கட்டாயமாக சந்தாப்பணம் பணிப்பாளரிடம் செலுத்திப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆகக் குறைந்த சந்தாப்பணமும் ஓய்வூதிய உரிமையும்.

I. (அ) ஓய்வூதிய நியதிச் சட்டம் செயற்படும் திகதியில் 55 வயதுக்கு மேற்பட்ட சந்தாக்காரர் ஒருவர் தொடர்பிலாகும் போது 60 தவணைகளில் தமது ஆகக் குறைந்த சந்தாப்பணத் தொகை செலுத்த இயலாதிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் எஞ்சிய தவணைப் பணத் தொகைகள் ஒரே தடவையில் அல்லது பகுதிகளாக சந்தாக்காரரால் கடைசியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளம் அடிப்படையாகக் கொண்டு 60 வயதாகும் போது தொடர்புடைய சந்தாப் பணத்தொகை பணிப்பாளரிடம் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) அவ்வாறாயினும் ஏதாவதொரு வகையில் 60 வயதை அடையும்போது ஆகக் குறைந்த சந்தாப் பணத்தொகையான 60 மாதாந்தத் தவணைப் பணத்தொகைகளைச் செலுத்தி முடிக்க இயலாதிருக்கும் எவரேனுமொரு சந்தாக்காரருக்கு ஓய்வுபெற்று ஆகக்கூடியது ஓராண்டு கால எல்லைக்குள் மேற்கூறிய பணத்தொகையைச் செலுத்தி முடிப்பதற்கு உரிமை இருத்தல் வேண்டும் ;

(இ) மேலே 6.I (அ) மற்றும் 6. I (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் சந்தாப் பணத்தொகைகளைச் செலுத்தி முடிக்கும் சந்தாக்காரர் ஒருவருக்கு இக்கட்டளைகளின் (அ) அட்டவணையின் 2 ஆம் கூட்டில் காட்டப்பட்டுள்ளவாறு ஓய்வூதியத்திற்கான உரிமை கிடைக்கும்.

II. (அ) ஓய்வூதியத் திட்டம் செயற்பட்ட திகதியாகும் போது சேவையில் ஈடுபட்டிருந்து, இக்கட்டளைகள் செயற்படும் திகதியில் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ள அத்துடன் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்ற சந்தாக்காரர் ஒருவர் தமது ஆகக் குறைந்த சந்தாப்பணத் தொகையின் 60 தவணைகள் சந்தாப் பணத்தொகை ஒரே தடவையில் அல்லது பகுதிகளாக அந்த நபரினால் கடைசியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளம் அடிப்படையாகக் கொண்டு ஓராண்டு கால எல்லைக்குள் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) மேலே 6. II (அ) பிரிவின் கீழ் சந்தாப் பணத்தொகைகளைச் செலுத்தி முடிக்கும் சந்தாக்காரர் ஒருவருக்கு, இக்கட்டளைகளின் (அ) அட்டவணையின் 02 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதியத்திற்கான உரிமை கிடைக்கும் ;

(இ) இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தர்ப்பத்தில், அடுத்துவரும் பிறந்த தினத்தில் 55 வயதிற்கு மேற்படாத சந்தாக்காரர் ஒருவர் தொடர்பிலாகும் போது இக்கட்டளைகளின் (அ) அட்டவணையின் 01 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகக் குறைந்த மாதாந்த சந்தாப் பணத்தொகை செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் அக்கூட்டின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் பெறுவதற்கு அவர் உரிமையுள்ளவராவார்.

*வைத்திய சிகிச்சைகள் காரணமாக பிரதிலாபங்கள் செலுத்தப்படுதல்.*

7. வைத்திய சிகிச்சைகள் காரணமாக ஓய்வுபெற்றுள்ள அங்கத்தவர் ஒருவர் தொடர்பிலாகும் போது,

I. அவர் ஓய்வூபெறும் திகதிக்கு 50 வயதிற்கு மேற்படாத ஓர் அங்கத்தவராயின் ஆகக்குறைந்த வகையில் 60 தவணைகள் செலுத்தியுள்ளபோது 60 வயதைப் பூர்த்தியடைந்த பின்பு அவர் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உடையவராக இருப்பார் ;

II. ஓய்வூதியம் பெறும் தினத்தில் 50 வயதுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் ஆகக் குறைந்தது 120 தவணைகளாவது சந்தாப் பணத்தொகை செலுத்தி இருப்பாராயின் அவருக்கு 60 வயது பூர்த்தியடைந்த பின்பு ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருக்கும் ;

III. அவ்வாறாயினும் சந்தாக்காரரால் கேட்கப்படும் போது அதுவரையும் அறவிடப்பட்ட சந்தாப்பணத் தொகைகளையும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணமும் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்துடன் ஒரே தடவையில் செலுத்தும் கோவைப் பணத்தொகை ஒன்றாகப் பெறுவதற்கு கந்தாக்காரருக்கு உரிமை இருக்கும் ;

IV. மேலே 7. I அல்லது 7. II ஆம் பிரிவின் கீழான ஓய்வூதியம் அல்லது 7. III ஆம் பிரிவின் கீழான கோவைப் பணத்தொகை ஆகிய இரண்டில் ஒருவகை பிரதிலாபம் மாத்திரமே சந்தாக்காரர் பெறுவதற்கு உரிமை உடையவராக இருப்பார்;

V. 50 வயதிற்கு மேற்பட்ட ஊழியர் ஒருவர் தொடர்பிலாகும் சந்தர்ப்பம் ஒன்றில், ஆகக் குறைந்தது 60 தவணைகளாவது சந்தாப்பணம் செலுத்தாமல் இருக்கும் போது, பணிப்பாளரால் விதிக்கப்படும் கால எல்லை ஒன்றிற்குள் எஞ்சியுள்ள சந்தாப்

பணத்தொகைகளை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் செலுத்தி முடிக்கும் சந்தாக்காரர் ஒருவருக்கு 60 வயது பூர்த்தியடையும் போது ஓய்வூதியம் பெற அவருக்கு உரிமை இருக்கும். எஞ்சிய தவணைப் பணத்தொகைகளைச் செலுத்துவதற்காக விதிக்கப்பட்ட கால எல்லையானது, சந்தாக்காரரின் 60 வயது பூர்த்தி அடையும் தினம் அல்லது பணம் செலுத்துவதற்கு விதிக்கப்படும் திகதி தொடக்கம் ஒரு வருட கால எல்லை ஆகிய இரண்டில் முதலில் வரும் தினமாகும் ;

VI. 50 வயதுக்குக் குறைந்த ஊழியர் ஒருவரின் தொடர்பிலாகும் சந்தர்ப்பம் ஒன்றில், ஆகக் குறைந்தது 120 தவணைகளாவது சந்தாப்பணம் செலுத்தாமல் இருக்கும் போது, சந்தாக்காரரிடம் இருந்து அதுவரையும் அறவிடப்பட்ட சந்தாப் பணத்தொகையும் அதற்கான வட்டிப் பணமும் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் ஒரே தடவையில் செலுத்தப்படும் கோவைப் பணத்தொகை ஒன்றாகப் பெறுவதற்கு அத்தகைய சந்தாக்காரர் ஒருவருக்கு உரிமை இருக்கும் ;

VII. மேலே 7. V ஆம் பிரிவின் கீழ் உரிமைகோரப்படாமல் இருப்பின், அத்தகைய சந்தாக்காரர் ஒருவருக்கு ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் தேறிய சந்தாப் பணத்தொகையும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணத்தொகையும் ஒரே தடவையில் செலுத்தப்படும் கோவைப் பணத்தொகை ஒன்றாக பெற்றுக் கொள்வதற்கு உரிமை இருக்கும்.

8. I. சந்தாக்காரர் ஒருவர் ஓய்வூதிய உரிமை பெறுவதற்குமுன் கூட்டுறவுச் சேவையிலிருந்து விலகுவாராயின் அவர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து விலகியவாராகக் கருதப்படுவார். அத்துடன் அத்தகைய ஒருவருக்கு பணிப்பாளரிடம் எழுத்துமூலமாக கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் பணிப்பாளரால் ஆலோசனைக்குழுவின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படும் வகையில் சந்தாக்காரரின் தேறிய சந்தாப்பணத் தொகையும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணமும் ஒரே தடவையில் செலுத்தும் கோவைப் பணத் தொகையொன்றாகப் பெறுவதற்கு மேற்கூறிய சந்தாக்காரருக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

*சேவையிலிருந்து விலகிய போது செலுத்தப்படும் பிரதிலாபங்கள்.*

II. எவரேனுமொரு சந்தாக்காரர் வெளிநாட்டில் தொழில் நோக்கமாக சம்பளமற்ற விடுமுறை பெற்று தற்காலிகமாக கூட்டுறவுச் சேவையில் இருந்து விலகியிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் அத்தகைய சம்பளமற்ற சேவைக் காலம் ஓய்வூதியம் கணிப்பதற்காக கணக்கெடுக் கப்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் அக்கால எல்லைக்காக சந்தாப் பணமும் அறவிடப்படாதிருத்தல் வேண்டும்.

*சம்பளமற்ற விடு முறை பெற்றுள்ள சந்தர்ப்பம் ஒன்றில்.*

9. ஏதாவதொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது கூட்டுச் சங்கம் சட்ட ரீதியில் ஒழித்துக் கட்டுவதற்காக பதிவை இரத்துச் செய்துள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அச்சங்கத்தின் அல்லது கூட்டுச் சங்கத்தின் பதிவை இரத்துச் செய்யும் திகதிவரை சந்தாக்காரரால் சந்தாப்பணம் செலுத்தப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில்,

*இரத்துச் செய்யப் பட்ட சங்கமொன் றின் அல்லது கூட் டுச் சங்க மொன் றின் சந்தாக்காரர் ஒருவருக்கு பிரதி லாபங்கள்.*

I. சங்கத்தின் அல்லது கூட்டுச் சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 50 வயதுக்கு மேற்பட்ட சந்தாக்காரர் ஒருவர் ஆகக் குறைந்தது 60 தவணைகளாவது சந்தாப் பணம் செலுத்தியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் 60 வயதைப் பூர்த்தியடைந்த பின்பு அவர் ஓய்வூதியம் பெற உரிமை உடையவராவார் ;

II. சங்கத்தின் அல்லது கூட்டுச் சங்கத்தின் பதிவு இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் 50 வயதுக்கு மேற்படாத சந்தாக்காரர் ஒருவர் ஆகக் குறைந்தது 120 தவணைகளாவது சந்தாப்பணம் செலுத்தியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் 60 வயதைப் பூர்த்தியடைந்த பின்பு அவர் ஓய்வூதியம் பெற உரிமை உடையவராவார்.

III. அவ்வாறாயினும் சந்தாக்காரரால் கேட்கப்படும் போது அதுவரையும் அறவிடப்பட்ட கந்தாப்பணத்தொகைகளையும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணமும் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்துடன் ஒரே தடவையில் செலுத்தும் கோவைப் பணத்தொகை ஒன்றாகப் பெறுவதற்கு சந்தாக்காரருக்கு உரிமை இருக்கும் ;

IV. மேலே 9. I அல்லது 9. II ஆம் பிரிவின் கீழான ஓய்வூதியம் அல்லது 9. III ஆம் பிரிவின் கீழான கோவைப் பணத்தொகை ஆகிய இரண்டில் ஒருவகை பிரதிலாபம் மாத்திரமே சந்தாக்காரர் பெறுவதற்கு உரிமை உடையவராக இருப்பார் ;

V. 50 வயதிற்கு மேற்பட்ட ஊழியர் ஒருவர் தொடர்பிலாகும் சந்தர்ப்பம் ஒன்றில், ஆகக் குறைந்தது 60 தவணைகளாவது சந்தாப்பணம் செலுத்தாமல் இருக்கும் போது, பணிப்பாளரால் விதிக்கப்படும் கால எல்லை ஒன்றிற்குள் எஞ்சியுள்ள சந்தாப் பணத் தொகைகளை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் செலுத்தி முடிக்கும் சந்தாக்காரர் ஒருவருக்கு 60 வயது பூர்த்தியடையும் போது ஓய்வூதியம் பெற உரிமை இருக்கும். எஞ்சிய தவணைப் பணத் தொகைகளைச் செலுத்துவதற்காக விதிக்கப்பட்ட கால எல்லையானது, சந்தாக்காரரின் 60 வயது பூர்த்தி அடையும் தினம் அல்லது பணம் செலுத்துவதற்கு விதிக்கப்படும் திகதி தொடக்கம் ஒரு வருட கால எல்லை ஆகிய இரண்டில் முதலில் வரும் தினமாகும் ;

VI. 50 வயதுக்குக் குறைந்த ஊழியர் ஒருவரின் தொடர்பிலாகும் சந்தர்ப்பம் ஒன்றில், ஆகக் குறைந்தது 120 தவணைகளாவது சந்தாப் பணம் செலுத்தாமல் இருக்கும் போது, சந்தாக்காரரிடம் இருந்து அதுவரையும் அறவிடப்பட்ட சந்தாப் பணத்தொகையும் அதற்கான வட்டிப் பணமும் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் ஒரே தடவையில் செலுத்தப்படும் கோவைப் பணத்தொகை ஒன்றாகப் பெறுவதற்கு அத்தகைய சந்தாக்காரர் ஒருவருக்கு உரிமை இருக்கம் ;

VII. மேலே 9.V ஆம் பிரிவின் கீழ் உரிமைகோரப்படாமல் இருப்பின், அத்தகைய சந்தாக்கார் ஒருவருக்கு ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் தேறிய சந்தாப்பணத்தொகையும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணத்தொகையும் ஒரே தடவையில் செலுத்தப்படும் கோவைப் பணத்தொகை ஒன்றாக பெற்றுக் கொள்வதற்கு உரிமை இருக்கும்.

*மரண பணிக் கொடை.*

10. சந்தாக்காரர் ஒருவர் ஓய்வூதியத் திட்டத்திற்கு ஏதேனும் மேலதிக சந்தாப் பணத்தொகை ஒன்று செலுத்தாமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மரண பணிக்கொடையைப் பெறுவதற்கு உரிமை உள்ளவராக இருப்பர்.

*மரண பணிக் கொடையைப் பெற்றுக்கொள்வதற் கான உரிமை.*

11. இங்கு (ஆ) அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காலம் உடைய சந்தாக்காரர் ஒருவராகும் சந்தர்ப்பமொன்றில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மரண பணிக்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கு இதன்பின்பு விதிக்கப்பட்டுள்ளவாறு அண்டி வாழ்ந்தவர்களுக்கு உரிமை இருக்கும்.

I. மரணமடைந்த சந்தாக்காரர் விவாகமான ஒருவராக இருந்த சந்தர்ப்பமொன்றில் -

(அ) விதவையான மனைவி/ மனைவியை இழந்த கணவன் இடம் மரண பணிக்கொடையின் சரி பாதியையும் தொழிலற்ற விவாகமாகாத பிள்ளைகளுக்கிடையே சம பங்குகளாக எஞ்சிய பாதியையும் செலுத்தலாம் ;

(ஆ) தொழிலற்ற அத்துடன் விவாகமாகாத பிள்ளைகள் இல்லாதிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் மரண பணிக்கொடையின் முழுப் பணத்தொகையும் விதவையான மனைவியிடம்/மனைவியை இழந்த கணவனிடம் செலுத்தப்படலாம் ;

(இ) சந்தாக்காரரின் விதவையான மனைவி /மனைவியை இழந்த கணவன் இறந்துள்ள சந்தர்ப்பமொன்றில் மரணப் பணிக்கொடையின் முழுப் பணத்தொகையும் சம பங்குகளாக விவாகமாகாத பிள்ளைகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

II. விவாகமாகாத சந்தாக்காரர் ஒருவர் இறந்த சந்தர்ப்பம் ஒன்றில் -

(அ) சந்தாக்காரரின் தாய், தந்தையர்களுக்கிடையே மேற்கூறிய மரண பணிக்கொடைப் பணத்தொகையை சம பங்குகளாகப் பகிர்ந்தளித்தல் வேண்டும். தாய் மற்றும் தந்தை ஆகியோர்களுள் ஒருவர் மாத்திரம் சீவித்திருப்பாராயின் பணிக்கொடையின் முழுப் பணத்தொகையையும் அவரிடம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும் ;

(ஆ) தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் இறந்துள்ள சந்தர்ப்பமொன்றில் விவாகமாகாத சகோதர சகோதரிகளுக்கிடையே மேற்கூறிய பணத்தொகை பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் ;

III. மரணமடைந்த சந்தாக்காரரின் மரண பணிக்கொடை பராயமடையாதவர்களுக்கு உரித்தாகும் சந்தர்ப்பங்களில் அவர்களின் பெயரில் கிராமிய வங்கியில் பராயமடையாதவர்களுக்கான கணக்கு ஒன்றில் வைப்புச் செய்து அதைப்பற்றி தொடர்புடைய பொறுப்பாளர்களிடம் அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவற்றைப் பதிவு செய்து கணக்குப் புத்தகங்கள்/சான்றிதழ்கள் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளப்படல் வேண்டும். பராயமடையாதவர்களின் வயது பூர்த்தியடைந்து அவர்களால் கேட்கப்படும் சந்தர்ப்பங்களில் பணிக்கொடை பணங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் ;

IV. அண்டி வாழ்வோர்கள் தொடர்பில் தீர்த்துக்கொள்ள இயலாதிருக்கும் பிரச்சினைகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணிப்பாளரால் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படும் வகையில் அண்டி வாழ்வோர்களுக்கு பணிக்கொடை செலுத்தப்படல் வேண்டும்.

12. சந்தாக்காரரின் அண்டி வாழ்வோர்களினால் சந்தாக்காரரின் மரணத்திற்கான பணிக்கொடை பெறும் சந்தர்ப்பத்தில் மரணம் ஏற்பட்டு 90 நாட்களுக்குள் பணிப்பாளரிடம் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

*90 நாட்களுக்குள் மரணம் பற்றி அறிவித்தல் வேண்டும் என்பது பற்றி.*

13. சந்தாக்காரர் மரணமடைந்த சந்தர்ப்பத்தில், பணிப்பாளரால் ஆலோசனைக்குழுவின் தீர்மானத்தின்படி அந்த சந்தாக்காரரின் தேறிய சந்தாப் பணத்தொகையும் ஏற்புடைய வட்டிப் பணமும் கோவைப் பணத்தொகை ஒன்றாக 11 ஆம் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் சந்தாக்காரரின் அண்டி வாழ்வோர்களுக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*மரணமடைந்த சந்தாக்காரரின் சந்தாப்பணம்.*

14. நியதிச் சட்டத்தின் 14. II ஆம் பிரிவின் கீழ் எவரேனுமொரு சந்தாக்காரருக்கு பிரதிலாபங்கள் உரித்தாகாமல் இருக்குமாயின் அதைப்பற்றி பணிப்பாளரால் சந்தாக்காரரிடம் அறிவிக்கப்பட்ட திகதி தொடக்கம் தமது சான்றிதழை செல்லுபடியாக்கிக் கொள்வதற்காக 30 நாட்களுக்குள் பணிப்பாளரிடம் மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்படலாம்.

*சான்றிதழை மீள செல்லுபடியாக்கிக் கொள்வதற்காக 30 நாட்களுக்குள் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பது பற்றி.*

15. I. எவரேனுமொரு சந்தாக்காரர் கூட்டுறவுச் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது பதவியை விட்டு விலகிச் சென்ற ஒருவராகக் கருதப்பட்டால் அவர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்த நீங்கிய ஒருவராகக் கருதப்படல் வேண்டும் அத்துடன் அத்தகைய ஒருவரால் எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கை ஒன்றின்படி பணிப்பாளரால் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படும் சந்தாக்காரரின் தேறிய சந்தாப்பணத்தொகை மாத்திரம் பெறுவதற்கு அந்த சந்தாக்காரருக்கு உரிமை கிடைத்தல் வேண்டும் ;

*பதவி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பதவி விலகிய சந்தாக்காரர் ஒருவர் தொடர்பிலாகும் சந்தர்ப்பம் ஒன்றில்.*

II. எவ்வாறாயினும் சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு நட்டமொன்று ஏற்படுத்தி உள்ளமை பற்றி சட்டரீதியான விசாரணையொன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அல்லது அத்தகைய சட்டரீதியான விசாரணையொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் கால எல்லையொன்றினுள் மேற்கூறிய தேறிய சந்தாப் பணத்தொகையானது, சந்தாக்காரரினால் சங்கத்துக்கு செய்யப்பட்ட நட்டம் முழுமையாகச் செலுத்தப்பட்டிருந்தால் அல்லது சட்டரீதியான விசாரணை முடிவடைந்து சங்கத்திற்கு எவ்வித நட்டமும் ஏற்படவில்லை என உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே செலுத்தப்படல் வேண்டும்.

*சட்டரீதியான விசாரணையொன்றில் குற்றவாளியாக்கப்பட்ட சந்தாக்கார் ஒருவர் தொடர்பிலாகும் சந்தர்ப்பமொன்றில்.*

16. எவரேனுமொரு சந்தாக்காரரின் கூட்டுறவுச் சேவை தடை செய்யப்பட்டு மீளவும் சேவையில் அமர்த்தப்பட்டால் பணிப்பாளரால் விதிக்கப்படும் கால எல்லை ஒன்றிற்குள் எஞ்சியுள்ள சந்தாப் பணத்தொகை செலுத்தி முடிக்கப்படல் வேண்டும்.

*மீள சேவையில் அமர்த்தப்பட்ட சந்தாக்காரர் ஒருவர் தொடர்பிலாகும் போது.*

அவ்வாறு செலுத்தி முடிக்கப்பட்ட திகதி சந்தாக்காரரிடம் அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் அத்தினத்திற்கு முன் எஞ்சியுள்ள சந்தாப்பணத் தொகையைச் செலுத்துவதற்குத் தவறினால் அவரது சான்றிதழ் செல்லுபடியற்றதானதாகக் கருதப்படல் வேண்டும்.

17. I. நியதிச் சட்டத்தின் 13. I ஆம் உட்பிரிவின் கீழ் எவரேனுமொரு சந்தாக்காரரிடம் செலுத்த வேண்டிய குறிப்பிட்ட பிரதிலாபங்கள் உரித்தற்றதாகும் சந்தர்ப்பம் ஒன்றில் அதைப் பற்றிய அறிவித்தலொன்று பணிப்பாளரால் அந்த சந்தாக்காரரிடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் ;

II. மேலே 17.I ஆம் உப்பிரிவின் கீழ் சானறிதழ் இல்லாதொழிந்த சந்தாக்காரர் ஒருவர் மென்மேலும் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்திருப்பதற்கு எதிர்பார்ப்பவராக இருப்பாராயின், அவரால் சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டம் முழுமையாக செலுத்தி முடிக்கப்பட்டு, பணிப்பாளரிடம் எழுத்துமூலமாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் 17.I ஆம் உப்பிரிவின்படி அறிவித்தல் கிடைத்து 03 மாதங்களுக்குள் பணிப்பாளரிடம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் ;

III. மேலே 17.II ஆம் பிரிவின் கீழான விண்ணப்பத்தின்படி ஓய்வூதியத் திட்டத்தில் மென்மேலும் சேர்ந்திருப்பதற்கான சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்த பின்பு பணிப்பாளரால் விதிக்கப்படும் கால எல்லை ஒன்றிற்குள் எஞ்சியுள்ள சந்தாப் பணத்தொகை செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தி முடிக்கப்பட்ட திகதி சந்தாக்காரரிடம் அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் அத்தினத்திற்கு முன் எஞ்சிய சந்தாப் பணத்தொகை செலுத்துவதற்குத் தவறினால் அவரது சான்றிதழ் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். அவ்வாறாயினும் பண்பாளரால் விதிக்கப்படும் கால எல்லையானது, 06 மாதங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

*60 வயதுக்கு முன் ஓய்வுபெறும் சந்தர்ப்பம் ஒன்றில்.*

18.I. எவரேனுமொரு சந்தாக்காரர் தமது 55 வயது பூர்த்தியடைந்த பின்பு 60 வயது பூர்த்தியடைவதற்கு முன்பு முறைப்படி சேவையிலிருந்து ஓய்வுபெறும் சந்தாக்காரர் ஒருவருக்கு, அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பமாகும் போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ள சந்தாப் பணத் தவணைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டளைகளின் (அ) அட்டவணையின் 01 ஆம் கூட்டின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஓய்வு ஊதியமொன்று பெறுவதற்கு 60 வயது பூர்த்தியாகும் திகதி தொடக்கம் உரிமைபெறுதல் வேண்டும்.

II. அவ்வாறு இல்லாவிட்டால் அதகைய சந்தாக்காரர் ஒருவரால் பணிப்பாளரிடம் எழுத்துமூலமாகச் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளின்படி பணிப்பாளரால் ஆலோசனைக்குழுவின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படும் வகையில் சந்தாக்காரரின் தேறிய சந்தாப் பணத்தொகையும் அதற்கு ஏற்புடையதாகும் வட்டிப் பணமும் ஒரே தடவையில் செலுத்தப்படும் கோவைப் பணத்தொகை ஒன்றாக பெறுவதற்கு மேற்கூறிய சந்தாக்காரருக்கு உரிமை கிடைத்தல் வேண்டும்.

III. மேற்கூறிய சந்தாக்காரருக்கு 18.I ஆம் பிரிவின கீழான ஓய்வூதியம் அல்லது 18.II ஆம் பிரிவின் கீழான கோவைப் பணத்தொகை ஆகிய இரண்டு வகையில் ஒருவகையிலான பிரதிலாபம் மாத்திரமே பெறுவதற்கு உரிமை இருக்கும்.

*60 வயதுக்கு முன் பதவி விலகி ஓய்வூதியம் பெற முன்பு இறந்த சந்தாக்காரர் ஒருவர் தொடர்பிலாகும் போது.*

19. இக்கட்டளைகளின் 7, 9 மற்றும் 18 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமைபெறும் சந்தாக்காரர் ஒருவர் 60 வயது பூர்த்தியடைவதற்கு முன் மரணமடைந்தால் இங்கு (அ) அட்டவணையின்படி கணக்கிடப்பட்ட மரணப் பணிகொடையொன்றும் 13 ஆம் கட்டளையில் குறிப்பிடப்பட்ட கோவைப் பணத்தொகை ஒன்றாக இக்கட்டளைகளின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் உரிமை பெறுபவர்களிடம் செலுத்தப்படல் வேண்டும்.

*சங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தியுள்ள சந்தர்ப்பமொன்றில் கோவைப்பணம் செலுத்தப்படாதிருத்தல் வேண்டும் என்பது பற்றி.*

20. இக்கட்டளைகளின் கீழ் கோவைப் பணத்தொகையொன்றைப் பெறுவதற்கு உரிமைபெறும் சந்தாக்காரர் ஒருவரால் சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு நட்டமொன்று ஏற்படுத்தி உள்ளமை பற்றி சட்டரீதியான விசாரணையொன்றின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அல்லது அத்தகைய சட்டரீதியான விசாரணையொன்று நடைபெறும் கால எல்லையொன்றிற்குள் சங்கத்திற்கு ஏற்படுத்திய நட்டத்தை முழுமையாகச் செலுத்தியிருந்தால் அல்லது சட்டரீதியான விசாரணை முடிவடைந்து சங்கத்திற்கு நட்டம் ஏற்படவில்லை என உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே அவர் மேற்கூறிய கோவைப் பணத்தொகை பெற உரிமை உடையவராக இருப்பார்.

21. எவரேனும் ஓர் ஓய்வூதியக்காரர் மரணமடைந்தபோது அவர் மரணமடையும் சந்தர்ப்பம் வரை பெற்றுக்கொண்டுள்ள மொத்த ஓய்வூதியப் பணத்தொகையானது, செலுத்தப்பட்ட மொத்த சந்தாப் பணத்தொகை மற்றும் அதற்கு ஏற்புடைய வட்டிப் பணத்தொகையிலும் குறைவான சந்தர்ப்பம் ஒன்றில் அத்தகைய குறைவான பணத்தொகை ஓய்வூதியக்காரரை அண்டி வாழ்ந்தவர்களுக்கு ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற கோவைப் பணத்தொகையொன்றாகச் செலுத்தப்படலாம்.

22. இக்கட்டளைகளின் கீழ் கோவைப் பணத்தொகை ஒன்றாக அல்லது தேறிய சந்தாப் பணத்தொகை ஒன்றாக ஒரே தடவையில் செலுத்தப்படும் பணத்தொகை ஒன்றாகப் பெறுவதற்கு உரிமைபெறும் எவரேனுமொரு சந்தாக்காரரால், தமது தொழில் வழங்குநரான சங்கத்துடன் அல்லது கூட்டுச் சங்கத்துடன் சட்டரீதியான முறையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றின்படி ஏதாவதொரு பணத்தொகை மேற்கூறிய சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாக உள்ள ஒரு சந்தர்ப்பத்தில் சங்கத்தினால் அல்லது கூட்டுச் சங்கத்தினால் சந்தாக்காரரின் இணக்கத்துடன் பணிப்பாளரிடம் கேட்கப்படும் வேண்டுகோளைக் கவனித்ததன் பின்பு மேற்படி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படியான முழுப் பணத்தொகை அல்லது அதன் ஒரு பகுதியைச் செலுத்துவதற்காக சந்தாக்காரரின் கோவைப் பணத்தொகை/தேறிய சந்தாப் பணத்தொகை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக வேண்டுகோள் சமர்ப்பிக்கும் சங்கத்திற்கு அல்லது கூட்டுச் சங்கத்திற்கு ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் செலுத்தப்படலாம்.

கோவைப் பணத்தின் மூலம் அல்லது தேறிய சந்தாப் பணத்திலிருந்து உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பணத் தொகைகளைச் செலுத்தல்.

23. இந்த கட்டளைகளில் காட்டப்பட்டுள்ளவாறு அல்லாத எவரேனுமொரு சந்தாக்காரர் தொடர்பில் ஓய்வூதியங்கள்/கொடுப்பனவுகள்/பணிக்கொடைகள் செலுத்தல் தொடர்பில் ஏதாவதொரு பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பம் ஒன்றில் பணிப்பாளரால் ஆலோசனைக் குழுவின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பம் ஒன்றில்.

24. தகுந்த குறியீட்டு இலக்க முறையொன்றை உபயோகித்து நியதிச் சட்டத்தின் 14. I ஆம் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சந்தாக்காரரிடம் வழங்கப்படும் சான்றிதழுக்கு மேலதிகமாக ஓய்வூதியத் திட்டத்தின் விவகாரங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றை சீர்செய்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பில் தேவையாகக்கூடிய தகவல்களை உட்படுத்தி படிவங்களை ஒழுங்கு செய்து உபயோகித்தல் வேண்டும்.

படிவங்கள்.

I. விருப்பத்தைத் தெரிவிக்கும் பிரகடனப் பத்திரம் ;

II. ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பம் ;

III. சந்தாப்பணம் சம்பளத்திலிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக அதிகாரமளிக்கும் கடிதம் ;

IV. மாதாந்த சந்தாப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான ஆவனம் ;

V. தண்டப் பணத்தொகைகளை அறவிட்டுக் கொள்ளும் அறிவித்தல் ;

VI. மரண பணிக்கொடை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவம் ;

VII. கோவைப் பணத்தொகை அல்லது தேறிய சந்தாப் பணத்தொகை மீளப் பெறும் விண்ணப்பப்படிவம் ;

VIII. சந்தா நிலையை ஒருங்கிணைக்கும் விண்ணப்பப்படிவம் ;

IX. ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்துவதற்கு மென்மேலும் தேவைப்படுமென உணரும் விண்ணப்பப்படிவம்.

25. எவரேனுமொரு சந்தாக்காரர் தமது தொழில் வழங்குநரான சங்கம் அல்லது கூட்டுச் சங்கத்தின் மூலம் விண்ணப்பித்து ஏனையவொரு கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது கூட்டுச் சங்கத்தில் நிரந்தர சேவையில் சேர்ந்து கொண்டால், அவ்வாறு சேர்ந்து கொண்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் ஓய்வூதியத் திட்டத்தின் பணிப்பாளரிடம் அதைப் பற்றி அறிவித்தல் வேண்டும். அத்துடன் பணிப்பாளரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவத்திற்கமைய தமது சந்தாச் சான்றிதழை செல்லுபடியானதாகப் பேணிச் செல்வதற்காக அங்கத்துவ நிலையை ஒருங்கிணைப்பதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

அங்கத்துவத்தை ஒருங்கிணைத்தல்.

கணக்குகளைப் பேணுதல்.

26. அங்கீகரிக்கப்பட்ட கணக்குக் கோட்பாட்டுக் கொள்கைகள் மற்றும் தரங்களுக்கு இணங்க கணக்குகளைப் பேணுவதற்கு பணிப்பாளரால் பொறுப்பேற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

வருடாந்த செலவின மதிப்பீடுகள்.

27. I. பணிப்பாளர் இந்த ஓய்வூயத்திட்டத்தின் பணிகளைச் செயற்படுத்துவதற்கான வருடாந்தச் செலவின மதிப்பீடுகளை ஒழுங்கு செய்து ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

II. வருடாந்த மதிப்பீட்டு எல்லைகள் போதாமையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அதற்காக குறைநிரப்பும் மதிப்பீடுகளை ஒழுங்கு செய்து ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மூன்று மாதங் களுக்கான அறிக்கை.

28. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மூன்றுமாத பெறுகைகள் மற்றும் செலுத்தல்கள் தொடர்பான அறிக்கையை ஒழுங்கு செய்தல் வேண்டும். அத்துடன் அந்த அறிக்கை காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

வசதிகள் மற்றும் சேவைகள்.

29. ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது மாகாண நிதி ஒழுங்குவிதிகள் டெண்டர் குழுக்களின் வரையறைகளின்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் திணைக்களத் தலைவரின் வரையறைகளை மீறிச் செல்லும் சந்தர்ப்பங்களில் ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பணியாட்டொகுதி.

30. நியதிச்சட்டத்தின் 3. V ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு தேவையான பணியாட்டொகுதியில் சபரகமுவ மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் நிமித்த காலத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன் அவ்வாறு சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான பணியாட்டொகுதி ஒன்றிற்காக கூட்டுறவு ஆணையாளர் மற்றும் பதிவாளரின் இணக்கத்துடனும் ஆலோசனைக் குழுவின் சிபார்சுகளுடன் சபரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பணிகளை ஒப் படைத்தல்.

31. பணிப்பாளரால் ஓய்வூதியத் திட்டத்தின் பணியாட்டொகுதிக்காக அரச பணிப்பகுதிகள் ஒப்படைக்கப்படுதலைப் போன்று தகுந்தவாறு அதிகாரமும் அளிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி செயற் பட வேண்டும் என் பது பற்றி.

32. இந்த ஒழுங்குவிதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கிடையே ஒவ்வாமை ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி உரையே மேலோங்கி செயற்படல் வேண்டும்.

## (அ) அட்டவணை

சபரகமுவ மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்

1 ஆம் இலக்கக் கூடு

18 - 55 வயதுகளுக்கு இடைப்பட்ட வயதொன்றில் ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் ஊழியர்களால் செலுத்தப்படவேண்டிய தவணைப் பணத்தொகைகள் மற்றும் அவர்களுக்கு உரித்தாகும் ஓய்வூதியங்கள்.

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் |
|---|---|---|---|
| ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் பிறந்த நாளில் வயது | செலுத்தப்பட வேண்டிய மாதாந்த சந்தா தவணைப் பணத்திற் காக மாதாந்த திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் | செலுத்தப்படவேண்டிய ஆகக் குறைந்த தவணைகளின் எண்ணிக்கை | 60 வயது பூர்த்தியடையும் சந்தர்ப்பத்தில் இறக்கும் வரை உரித்துடையதாகும் ஓய்வூதியம் ஓய்வுபெறும் மாதத்தில் பெற்ற திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் |
| 19 | 5 | 504 | 80 |
| 20 | 5 | 492 | 79 |
| 21 | 5 | 480 | 78 |
| 22 | 5 | 468 | 77 |

**(அ) அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் |
|---|---|---|---|
| ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் பிறந்த நாளில் வயது | செலுத்தப்பட வேண்டிய மாதாந்த சந்தா தவணைப் பணத்திற் காக மாதாந்த திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் | செலுத்தப்படவேண்டிய ஆகக் குறைந்த தவணைகளின் எண்ணிக்கை | 60 வயது பூர்த்தியடையும் சந்தர்ப்பத்தில் இறக்கும் வரை உரித்துடையதாகும் ஓய்வூதியம் ஓய்வுபெறும் மாதத்தில் பெற்ற திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் |
| 23 | 5 | 456 | 76 |
| 24 | 5 | 444 | 75 |
| 25 | 5 | 442 | 74 |
| 26 | 5 | 420 | 73 |
| 27 | 5 | 408 | 72 |
| 28 | 5 | 396 | 71 |
| 29 | 5 | 384 | 70 |
| 30 | 5 | 372 | 69 |
| 31 | 5 | 360 | 68 |
| 32 | 5 | 348 | 67 |
| 33 | 5 | 336 | 66 |
| 34 | 5 | 324 | 65 |
| 35 | 5 | 312 | 64 |
| 36 | 5 | 300 | 63 |
| 37 | 5 | 288 | 62 |
| 38 | 5 | 276 | 61 |
| 39 | 5 | 264 | 60 |
| 40 | 5 | 252 | 59 |
| 41 | 5 | 240 | 58 |
| 42 | 5 | 228 | 57 |
| 43 | 5 | 216 | 56 |
| 44 | 5 | 204 | 55 |
| 45 | 5 | 192 | 54 |
| 46 | 5 | 180 | 53 |
| 47 | 5 | 168 | 52 |
| 48 | 5 | 156 | 51 |
| 49 | 5 | 144 | 50 |
| 50 | 5 | 132 | 49 |
| 51 | 5 | 120 | 48 |
| 52 | 5 | 108 | 47 |
| 53 | 5 | 96 | 46 |
| 54 | 5 | 84 | 45 |
| 55 | 5 | 72 | 44 |

2 ஆம் இலக்கக் கூடு

50- 60 வயதுகளுக்கு இடைப்பட்ட வயதொன்றில் ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் ஊழியர்களால் செலுத்தப்படவேண்டிய தவணைப் பணத்தொகைகள் மற்றும் அவர்களுக்கு உரித்தாகும் ஓய்வூதியங்கள்.

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் | V ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| ஓய்வூதியத் திட்டத்தில் சேரும் சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் பிறந்த நாளில் வயது | செலுத்தப்பட வேண்டிய மாதாந்த சந்தா தவணைப் பணத்திற் காக மாதாந்த திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் | செலுத்தப்படவேண்டிய ஆகக் குறைந்த தவணைகளின் எண்ணிக்கை | 60 வயது பூர்த்தியடையும் சந்தர்ப்பத்தில் இறக்கும் வரை உரித்துடையதாகும் ஓய்வூதியம் ஓய்வுபெறும் மாதத்தில் பெற்ற திரட்டிய சம்பளத்தின் நூற்று வீதம் | ஓய்வூதியம் உரித்தாகும் சந்தர்ப்பம் |
| 56 தொடக்கம் 59 வரை | 5 | 60 | 40 | 60 வயது பூர்த்தி யடையும் திகதி அல்லது ஆகக் குறைந்தது 60 தவணை சந்தாப்பணம் செலுத்தி முடித்த திகதி ஆகிய இரண்டில் முதலில் வரும் திகதி தொடக்கம் |
| 60 | 5 | 60 | 40 | ஆகக்குறைந்தது 60 சந்தாப் பணத் தவணைகள் செலுத்தி முடிக்கப் பட்ட திகதியில் இருந்து ஓராண்டு பூர்த்தியடை யும் திகதி தொடக்கம் |

***(ஆ) அட்டவணை***

மரணமொன்றின் சந்தர்ப்பத்தில் செலுத்தப்படும் மரண பணிக்கொடை

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த திகதி தொடக்கம் சேவைக்காலம் | உரித்தாகும் மரணப் பணிக்கொடை ரூபா |
| 0 வருடங்களுக்குக் கூடிய - 5 வருடங்களுக்கு மேற்படாத | 10,000.00 |
| 5 வருடங்களுக்குக் கூடிய - 10 வருடங்களுக்கு மேற்படாத | 15,000.00 |
| 10 வருடங்களுக்குக் கூடிய - 15 வருடங்களுக்கு மேற்படாத | 20,000.00 |
| 15 வருடங்களுக்குக் கூடிய - 20 வருடங்களுக்கு மேற்படாத | 25,000.00 |
| 20 வருடங்களுக்குக் கூடிய - 25 வருடங்களுக்கு மேற்படாத | 30,000.00 |
| 25 வருடங்களுக்குக் கூடிய - 30 வருடங்களுக்கு மேற்படாத | 35,000.00 |
| 30 வருடங்களுக்கு மேற்பட்ட | 40,000.00 |

12- 463

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.